# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 4, 2025

Weekly E-paper • October 4, 2025




# த.வெ.க. பொறுப்பாளர்களைத் தனிப்படைகள் தேடுகின்றன!

சுப.வீரபாண்டியன்

## திராவிடப்பள்ளி ஆறாம் ஆண்டு தொடக்க விழா

## ‘சர்க்கஸ்’ அல்ல அரசியல்!

தலையங்கம்

## கரூருக்கு வந்தார் முதல்வர்! கதறி ஓடினார் நடிகர்!

காசு.நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 4, 2025 Weekly E-paper • October 4, 2025


# த.வெ.க. பொறுப்பாளர்களைத் தனிப்படைகள் தேடுகின்றன!

சுப.வீரபாண்டியன்

கரூரில் நடைபெற்ற பேரவலம் தொடர்பாகச் சென்னை உயர்நீதிமன்றம் இன்று வழங்கி உள்ள தீர்ப்புகள், வரலாற்றுச் சிறப்புடையன! மிக உறுதியாகவும், கண்டிப்பாகவும் பல ஆணைகளை நீதிமன்றம் வெளியிட்டுள்ளது !

இந்த வழக்கை சிபிஐ க்கு மாற்ற வேண்டும் என்னும் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கிறது. த.வெ.க வின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைப் பொதுச் செயலாளர் நிர்மல் குமார் ஆகியோருக்கு முன்பிணை (ஜாமின்) வழங்கவும் நீதிமன்றம் மறுத்துவிட்டது! எனவே இருவரையும் தேடி, 5 தனிப்படைகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விரைந்துள்ளனர்!

அது மட்டுமல்லாமல், தன்னுடைய எக்ஸ் வலைத்தளத்தில், கலவரத்தைத் தூண்டும் வகையில் பதிவிட்டிருந்த ஆதவ் அர்ஜுனா மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியிருக்கிறது!

அந்த ஆதவ் அர்ஜுனா இப்போது தனி விமானத்தில் தில்லிக்குச் சென்று இருக்கிறார். அவருடன், பாஜகவைச் சேர்ந்த ஒருவரும், பிரதமரின் பாதுகாப்புப் படையிலிருந்து இருவரும் உடன் சென்றிருக்கிறார்கள் என்று "மெட்ராஸ் ரிவ்யூ " என்னும் வலையொளி கூறுகின்றது!

த.வெ.க. தலைவர் விஜயும் எப்போதும் தனி விமானத்தில் தான் பயணிக்கிறார்! அதற்குப் பல சட்ட திட்ட முன் நிபந்தனைகள் உண்டு. ஆனால் கரூரில் இருந்து அவர் சட்டென்று சென்னை திரும்பி விட முடிகிறது!

மணிப்பூர் கலவரம் நடந்த போதோ, கும்பமேளாவில் மக்கள் இறந்த போதோ உண்மை அறியும் குழு எதனையும் அனுப்பாத பாஜக, கரூர் நிகழ்விற்கு மட்டும் உடனே நடிகை ஹேமமாலினி தலைமையில் ஒரு குழுவை அனுப்பி வைக்கிறது!

இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால், பல அரசியல் உண்மைகள் நமக்குப் புரியும்!

எதிரிகள் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு செய்தியும் இங்கே இருக்கிறது. அவர்கள் என்னதான் செய்தாலும், திராவிட மாடல் ஆட்சியை மக்களிடமிருந்து அகற்றி விட முடியாது என்பதே அது!




ஒரு விஐபி தனி விமானத்தில் பயணம் செய்ய வேண்டும் எனில், அவர் 3 நிலைகளை கிளியர் செய்ய வேண்டும்.

ஒன்று, வான்வெளி பயண விதிகளை பின்பற்ற வேண்டும்,

இரண்டாவது, பாதுகாப்பு புரோட்டோக்கால்களை பின்பற்ற வேண்டும்,

மூன்றாவது, ஒன்றிய அரசிடம் clearance வாங்க வேண்டும்.

இவை மூன்றும் கட்டாயம்.

# திராவிடப்பள்ளி
## ஆறாம் ஆண்டு தொடக்க விழா

27.09.2025
சனிக்கிழமை
மாலை 6.00 மணி முதல்
9.00 வரை
அன்பகம். தேனாம்பேட்டை
சென்னை – 600018



மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்




முனைவர் சுப.வீரபாண்டியன், நிறுவனர் – திராவிடப்பள்ளி



தோழர் இராஜீவ்காந்தி, வாழ்த்துரை, தி.மு.க மாணவரணி




பொள்ளாச்சி மா.உமாபதி, தலைமை ஒருங்கிணைப்பாளர்



சிற்பி செல்வராசு, வரவேற்புரை, பேரவைப் பொதுச்செயலாளர்



தோழர் மதிவதனி, துணைப் பொதுச்செயலாளர், திராவிடர் கழகம்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘சர்க்கஸ்’ அல்ல அரசியல்!

கரூர் துயர நிகழ்வு நிகழ்ந்த அன்றே தமிழ்நாடு அரசிடம் அறிக்கை கேட்டிருக்கிறார் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா. ஆளுநர் ரவியும் அறிக்கையைக் கேட்டிருக்கிறார்.

தமிழ்நாடு பா.ஜ.க. முன்னாள் தலைவர்கள் தமிழிசையும், அண்ணாமலையும் கரூர் சம்பவத்திற்குக் காவல்துறைதான் காரணம் என்று விஜய்க்கு ஆதரவாகப் பேசியிருக்கிறாரகள்.

ஜே.பி.நட்டா முன்னாள் நடிகை ஹேமமாலினி தலைமையில் அனுராக் தாக்கூர், தேஜஸ்விசூர்யா, பிரஜ்லால், அபராஜிதா சாரங்கி, ரேகாசர்மா, சிவசேனா கட்சியைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் ஷிண்டே, தெலுங்கு தேசக் கட்சியின் புட்டா மகேஷ் ஆகியோர் அடங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களை உண்மையறியும் குழுவாக அனுப்பி இருக்கிறார் கரூருக்கு. இவர்கள் அனைவரும் காவிகள்.

குஜராத்தில் 30-10- 2022 அன்று மோர்பி நகரில் உள்ள மச்சு ஆற்றுக்கு மேல் இருந்த பாலம் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கானோர் ஆற்றில் மூழ்கி இறந்தார்கள்.

03-05-2023 அன்று தொடங்கிய கலவரத்தால் மணிப்பூரில் துப்பாக்கிச் சூடுகள், பாலியல் வன்கொடுமை, பெண்கள் நிர்வாணம், உயிர்பலிகள் என்று இன்றுவரை தொடர்கிறது வன்முறைகள்.

உத்தரப் பிரதேசத்தில் 29-01-2025 அன்று நடைபெற்ற பிரயாக்ராஜ் கும்பமேளாவில் நெரிசலில் சிக்கி, பி.பி.சியின் தகவலின்படி 82 பேர் மரணம் அடைந்துள்ளார்கள்.

இங்கெல்லாம் அறிக்கை கேட்கவில்லை அமித்ஷா. உண்மை அறியும் ஒரு குழுவையும் நட்டா அனுப்ப வில்லை. இப்பொழுது தமிழ்நாட்டைக் குறிவைக்கிறது காவிக் கூட்டம்?

தமிழ்நாட்டில் பாஜக கனவு பலிக்காது. எனவே விழி பிதுங்கியிருந்த அதற்கு, நடிகர் விஜய் மாட்டிக் கொண்டார். கரூரைப் பிடித்துத் தொங்கத் தொடங்கிவிட்டது பாஜக.

அந்த தைரியத்தில் தனி வீடியோவில் விஜய், "சி.எம்.சார் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் என்னை என்னவேண்டுமாலும் செய்யுங்க. தொண்டர்கள் மீது கைவைக்க வேண்டாம்" என்று நடிக்கிறார். தொண்டர்களைக் கரூர் நடுவீதியில் விட்டுவிட்டுத் தலைதெறிக்க சென்னைக்கு ஓடிவந்தது தெரியாதா? விஜயின் பாஜக சாயம் வெளுத்துவிட்டது.

பாஜக வளைக்க நினைக்கிறது; விஜய் பூச்சாண்டி காட்டுகிறார். என்னதான் இவர்கள் 'சர்க்கஸ்' செய்தாலும் தி.மு.கவை அசைக்கக்கூட முடியாது இவர்களால்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...



தோழர் கார்த்திக், தொகுப்புரை, ஒருங்கிணைப்பாளர்



தோழர் வெற்றிச்செல்வன், ஆண்டறிக்கை வைத்தல், இணை ஒருங்கிணைப்பாளர்



தோழர் அறம் மதி, நன்றியுரை





# கரூருக்கு வந்தார் முதல்வர்! கதறி ஓடினார் நடிகர்!

**காசு. நாகராசன்**

அது கரூர், பொழுது இரவு...?

ஆட்சித் தலைவர் பாதிக்கப்பட்ட மக்களைக் காண ஓடோடி வருகிறார். ஆளுங்கட்சியின் மக்கள் பிரதிநிதிகள், எதிர்க்கட்சியின் பொறுப்பாளர்கள், பொதுவான இயக்கங்கள், சமூக ஆர்வலர்கள், எனஒரு பெருங் கூட்டம் விபத்து நடந்த இடத்தில் இருந்து மருத்துவ மனைகளுக்கு பறந்தோடுகின்றன. பதபதைப் போடும், வழியும் கண்ணீரோடும், பதட்டத்தோடும் தூக்கத்தைக் தொலைத்துக் கொண்டு செத்துப் போன ஒவ்வொரு உயிரையும் தன் வீட்டு உயிராய் உறவாய் கருதி கதறித் துடித்தபடி பரிதவிக்கிறது.

அந்த ஆணவ நடிகனால் இறந்து போனவர்களின் எண்ணிக்கை 41 ஆகிவிட்டது. குற்றுயிராய்க் கிடப் பவர்களைக் காப்பாற்றப் பக்கத்து மாவட்டங்களில் இருந்து கூடுதல் மருத்துவர்கள் வரவழைக்கப்படுகின் றனர். சுகாதாரத் துறை அமைச்சரும், பக்கத்து மாவட்டத்திலிருந்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், உள்ளூர் சட்டமன்ற உறுப்பினரோடு மீட்புப் பணிகளையும், சிகிச்சைப் பணிகளையும் கண்காணித்து மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்து கிறார்கள். இத்தனையும் ஒரே இரவில் நடக்கிறது. ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் மக்களைப் பாதுகாத்திடும் பணியில் களத்தில் நிற்கிறது என்றால் அதற்குக் காரணம் திராவிடமாடல் அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்.

இரவோடு இரவாக அதிகாலை 3 மணிக்குக் கரூர் மருத்துவமனைக்கு வந்த முதலமைச்சர் இறந்து போனவர்களுக்கு கனத்த மனதோடும், இறுகிய முகத்தோடும் மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தினார். பெற்றவர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறி அரசின் சார்பில் நிவாரண உதவிகளையும் அறிவிக்கிறார்.

ஆனால், இக்கொடுமைக்குக் காரணமான நடிகக் கும்பலின் ஒருவன்கூட மக்களைத் தேடி மருத்துவமனைக்கு வரவில்லை, ஓடி ஒளிந்து கொண்டனர்.

எப்போதும் தமிழ்நாட்டின் தனித்தன்மையை, தமிழ்நாட்டின் அடையாளத்தைச் சிதைத்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டி ஆடிக் கொண்டிருக்கும் டில்லி வாலாக்களும், உச்சிக் குடுமிகளும், மக்களின் கருத்தில் விஷம் கலக்க முடியுமா? மக்களின் கோபத்தைத் தூண்டி அரசின் மீது திருப்பி விட முடியுமா? என்று தமது குல வழக்கப்படி சூழ்ச்சி வலையைப் பின்னுகிறது அக்கிரகாரம்.

செந்தில்பாலாஜி எப்படி உடனே வந்தார்? முதலமைச்சர் ஏன் இரவோடு இரவாக வர வேண்டும்? விடிவதற்குள் ஏன் பிரேதப் பரிசோதனை செய்தார்கள்? என்கிற முட்டாள் தனமான வினாக்களை எழுப்புகிறது அந்தக் கூடாரம். கூட்டத்தைத் திரட்டி வைத்து, சோறு தண்ணீர் இல்லாமல் காக்க வைத்து, நெரிசலை உண்டாக்கியது யார்?

கட்டுப்பாடற்ற தற்குறிக் கூட்டத்தில் குழந்தைகள், சிறார்கள், பெண்கள் எல்லோரும் மூச்சுத் திணறிச் சாவதற்கு யார் காரணம்?

ரசிகர்களின் சாவுக்கு இரங்கலும், ஆறுதலும் கூட சொல்லாமல், தலை தெறிக்க ஓடிப் போய் விமானம் பிடித்து இரவோடு இரவாக வீட்டுக்குள் போய் பதுங்கிக் கொள்கிறவன், ஒரு தலைவனா?

நூறாண்டுகளாய் நாம் நடந்து வந்த பாதையில் முளைத்திருக்கும் பார்ப்பனியக் களைகள் நிறைந்து விட்டன. அதனைக் களைய வேண்டும். அதுவரை பார்ப்பனியமும், டில்லியும் இப்படித்தான் கரூர் வழியாகத் தமிழ்நாட்டில் நுழையப் பார்க்கும். ஆனால் அது நடக்காது.

சுயமரியாதை என்பது வெறும் சொல் அன்று. அது, ஒரு வரலாறு ! நினைவில் கொள்வோம்!

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian